DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.26/2018**
Prosecution witness **PW.7 (LW.6)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Shankar Ganesh | Caste | : | |
| Father Name | : | | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |
| Time | : | | | | |

**(Accused present. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **26.11.2025**

**26.11.2025 முதல் விசாரணை** :

1. நான் தற்போது கோவையிலுள்ள யுகோ வங்கி மண்டல ஆபிசில் சீனியர் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. 08.12.2016 ம் தேதி யுகோ வங்கி உதகை கிளை மேலாளராக நான் பணிபுரிந்து வந்த போது யுனியன் பேங்க் ஆப் இந்தியா கோவை கிளையிலிருந்து எங்களது கிளைக்கு போன் செய்து கே.மனோகரன் என்பவர் தங்களது கிளையில் வீட்டு கடனுக்காக அப்ளை செய்திருப்பதாகவும், அவர் யுகோ பேங்கில் கணக்கு வைத்திருப்பதாக ஸ்டேட்மென்ட் கொடுத்திருப்பதாகவும், அதை எங்களுக்கு மெயில் மூலம் அனுப்பி வைப்பதாகவும், அதை சரிபார்த்து கூறுமாறும் கேட்டார்கள்.

3. அன்றைய தினமே மெயில் அனுப்பியிருந்தார்கள். அந்த மெயிலில் பார்த்த போது 01.04.2016 ம் தேதி முதல் 01.12.2016 ம் தேதி வரையிலான மனோகரன் என்பவரது வங்கி கணக்கு நகல் இருந்தது. அதை எங்களது வங்கி கணக்கு நகல்களுடன் ஒப்பிட்டு பார்த்த போது அது எங்கள் வங்கியிலிருந்து வழங்கப்படவில்லை என்பதால் மேற்படி கணக்கு நகல்கள் எங்கள் வங்கியிலிருந்து வழங்கப்படவில்லை என்று போன் மூலம் யுனியன் பேங்க் ஆப் இந்தியா கோவை கிளைக்கு தெரிவித்தோம். இது தொடர்பாக போலிசார்

என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u> :–

1. யுனியன் பேங்க் ஆப் இந்தியா கோவை கிளையிலிருந்து ஆவணங்களை பரிசோதித்து சான்று வழங்குமாறு எழுத்துமூலமாக கேட்டிருந்தார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி கிளையிலிருந்து எங்கள் கிளைக்கு மெயில் மூலம் அனுப்பிய கணக்கு நகலை நான் பிரிண்ட் அவுட் எடுத்தேனா என்றால் இல்லை. எழுத்துமூலமாக மேற்படி கணக்கு நகல் எங்கள் வங்கியிலிருந்து வழங்கப்படவில்லை என்று நான் சான்று அளித்திருந்தேனா என்றால் அது தற்போது ஞாபகமில்லை.

2. போலிசார் என்னை எங்களது வங்கியில் வைத்து விசாரித்தார்கள். போலிசார் விண்ணப்ப கடிதம் எதுவும் கொடுத்தார்களா என்றால் அது தற்போது ஞாபகமில்லை. சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் போலிசார் சொல்லிக்கொடுத்தபடி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

Thiru.R.Abdul Salam, B.A,B.L

Digitally signed by Thiru.R.Abdul Salam, B.A,B.L
Date: 2025.11.26 17:48:54 +0530

Judicial Magistrate,
Coonoor.